மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

தரம் - 07	நாடகமும் அரங்கியலும்	நேரம்: 2.00 மணித்தியாலங்கள்

பெயர் / சுட்டெண் .....

பகுதி - I

01. மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1. பின்வருவனவற்றுள் தோற் கருவி.
   1. மத்தளம்
   2. வயலின்
   3. புல்லாங்குழல்
   4. தம்புரா

2. சொல்லாடல் நுட்பங்களில் முக்கியம் பெறாதது எது?
   1. தொனிப் பிரயோகம்
   2. லய பூர்வமான ஒலிப்பு
   3. ஏற்ற இறக்கம்
   4. தாள ஒலி

3. அரச பாத்திரத்திற்குரிய கைப்பொருள்.
   1. குடை
   2. வாள்
   3. தேர்
   4. சிம்மாசனம்

4. ஊமச் சித்திரிப்புக்கு பொருத்தமற்ற பயிற்சி எது?
   1. உடலுக்கான பயிற்சி
   2. குரலுக்கான பயிற்சி
   3. மனதுக்கான பயிற்சி
   4. அரங்க அசைவுப் பயிற்சி

5. "களிகம்பு" ஆடப்படும் சமூகத்தினர் யார்?
   1. மலையகத் தமிழர்
   2. சிங்களவர்
   3. இலங்கை முஸ்லிம்
   4. இலங்கைத் தமிழர்

02. சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.

1. கூத்துக் களரியை வட்டக்களரி எனவும் அழைப்பர் ( )
2. புதிய படைப்பாக்கத்திற்கு கற்பனை அவசியமில்லை. ( )
3. குரல் பயிற்சிக்கு சுவாசப் பயிற்சி அவசியமில்லை. ( )
4. நாட்டார் கதைகளில் நாட்டுப்புற வைத்திய விபரங்கள் காணப்படுகின்றன. ( )
5. "கண்டறியாத கதை" என்பது வரலாற்று நாடகம் ஆகும். ( )

kalvi.lk

03. தொடர்புபடுத்துக.

1. நாட்டார் கதைகள்	படச்சட்ட மேடை
2. மத்தளம்.	ஆடுகளம்
3. அரங்க வெளி	சமூக அந்தஸ்து
4. பௌதிகப் பண்பு	பலா மரம்
5. புறசீனியம் அரங்கு	நல்ல விழுமியங்கள்

04. பொருத்தமான விடையைத் தெரிவு செய்து எழுதுக.

(ஆற்றுகை, வேடஉடை, குழந்தை. ம. சண்முகலிங்கம், வசந்த கால விளையாட்டு, கரையாக்கு)

1. துணைக் கலைகளில் ..... ஒன்றாகும்.
2. கோலாட்டத்தை ..... எனவும் அழைப்பர்.
3. "ஈழத்தின் தமிழ் நாடகத் தலைமுறை ஒன்றின் தாய் ..... ஆவார்.
4. கொம்பு செய்யப் பயன்படும் மரம் ..... ஆகும்.
5. நாடகமும் அரங்கியலுக்குமாக வெளிவரும் சஞ்சிகை ..... ஆகும்.

(20 X 2 = 40 புள்ளிகள்)

பகுதி - II

❖ **ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. 1) அரங்கின் அடிப்படை மூலகங்கள் யாவை?

2) உமக்குத் தெரிந்த அரங்க வெளிகள் 2 குறிப்பிடுக.

3) அரங்க வெளி ஒன்றில் காணப்படும் பொதுவான இயல்புகள் 5 இனைக் குறிப்பிடுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

02. 1) கதைக்கும் நாடக எழுத்துருவுக்கும் இடையில் காணப்படும் ஒற்றுமைகள் 3 இனைக் குறிப்பிடுக.

2) கதைகளின் வகைகளுள் 4 இனைக் குறிப்பிடுக.

3) நாடகம் எழுதும் போது நீர் எதிர்கொண்ட சவால்கள் 5 தருக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

kalvi.lk

03. 1) நடிகனுக்கு வழங்கப்படுகின்ற பயிற்சிகள் 3 தருக.

2) சொல்லாடல்களை பயன்படுத்தும் போது ஏற்படும் உணர்ச்சிகள் நான்கு தருக.

3) நடிகனுக்கு உடற்பயிற்சி மூலம் கிடைக்கும் நன்மைகள் 5 தருக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

04. 1) நமது நாட்டார் கலைகள் மூன்று தருக.

2) நாட்டாரியலில் காணப்படும் அறிவியல் கூறுகள் 4 தருக.

3) நாட்டார் கதைகளில் காணப்படும் அறக் கருத்துக்கள் 5 குறிப்பிடுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

05. 1) கண்டறியாத கதை நாடகத்தின் கருப்பொருளைக் குறிப்பிடுக.

2) கண்டறியாத கதை நாடகத்தில் வருகின்ற பாத்திரங்களைக் குறிப்பிடுக.

3) இந்த் நாடகத்தில் உமக்குப் பிடித்த பாத்திரம் எது? அதற்கான காரணம் என்ன?

(3+4+5 = 12 புள்ளிகள்)

06. மூன்றிற்கு சிறு குறிப்பு எழுதுக.

1) நால்வகைச் சித்திரிப்பு

2) கோலாட்டம்

3) வானொலி நாடகம்

4) அரங்க கைப்பொருட்கள் தயாரித்தல்

5) அரங்கின் துணைக் கலைகள் (4+4+4 = 12 புள்ளிகள்)

Education LMD Unit අධ්‍යාපන

kalvi.lk